36. தமிழக அரசு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி எறியப்படும் நெகிழிப் பொருள்களுக்கு தடை விதித்த நாள் ______.

1) சனவரி 1, 2020 2) சனவரி 1, 2019 3) சனவரி 1, 2021 4) சனவரி 1, 2018

37. தீங்கு விளைவிக்கக்கூடிய காட்மியம், ஈயம் போன்ற கன உலோகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பொருள் எது?

1) PET பாட்டில் 2) PVC நீர் குழாய் 3) தெர்மாகோல் 4) நைலான்

38. பின்வருவனவற்றுள் புற்றுநோய் ஏற்படுத்த காரணமான பொருள்களுள் ஒன்று எது?

1) குளோரின் 2) ஸ்டைரீன் 3) அயோடின் 4) பாலி அமைடு

39. பின்வருவனவற்றுள் நீர் நிலைகளில் நுண்ணிய நெகிழிகள் கலக்கக் காரணமாக அமைவது எது?

1) பற்பசை 2) பாலியெஸ்டர்

3) உறிஞ்சுக் குழாய்கள் 4) அனைத்தும்

40. பின்வருவனவற்றுள் கடலில் கலக்கும் நெகிழிக் கழிவுகள், நுண்ணிய நெகிழிகளாக சிதைவுறக் காரணமாக அமைவது எது?

1) உவர்த்தன்மை 2) சூரிய ஒளி 3) கடல் அலை 4) அனைத்தும்

41. உற்பத்தியாகும் நெகிழிக் கழிவுகளில் சுமார் ______ % மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது.

1) 79 2) 12 3) 9 4) 1

42. இயற்கை இழை : கம்பளி, செயற்கை இழை : ?

1) பட்டு 2) பருத்தி 3) அக்ரிலிக் 4) கம்பளி

43. கக்கூன்களை கொதிக்க வைத்து பெறப்படுவது ______.

1) பட்டு 2) பருத்தி 3) அக்ரிலிக் 4) கம்பளி

44. செயற்கை இழைகளின் சிறப்பு ______.

1) சுருங்காது 2) நிறம் மாறாது 3) விலை மலிவு 4) அனைத்தும்

45. செயற்கை இழைகளின் குறைபாடு ______.

1) எளிதில் தீப்பற்றும் 2) வெப்பம் தாங்காது

3) காற்றோட்டம் இருக்காது 4) அனைத்தும்

LIVEWORKSHEETS

46. பின்வருவனவற்றுள் உயிரி நெகிழி தயாரிப்பில் பயன்படும் பொருள் எது?

1) குளோரின் 2) கிளிசரின் 3) அயோடின் 4) ஸ்டைரீன்

47. கூற்று: செயற்கை இழைகள் மறைமுகமாக பெரிய அளவில் நிலம், நீர் நிலைகளை மாசுபடுத்துகிறது.

காரணம்: செயற்கை இழைகள் நுண்ணிய இழைகளாக சிதைகிறது.

1) கூற்று சரி காரணம் தவறு
2) கூற்று காரணம் இரண்டும் சரி
3) கூற்று தவறு காரணம் சரி
4) கூற்று காரணம் இரண்டும் தவறு

48. கூற்று: கண்ணாடி தயாரிக்க மணலுடன் சோடியம் கார்பனேட் சேர்க்கப்படுகிறது

காரணம்: மணலின் வெப்பநிலையை குறைக்க சோடா சாம்பல் பயன்படுகிறது.

1) கூற்று சரி காரணம் தவறு
2) கூற்று காரணம் இரண்டும் சரி
3) கூற்று தவறு காரணம் சரி
4) கூற்று காரணம் இரண்டும் தவறு

49. சரியான இணையைத் தேர்வு செய்க.

1) பைரக்ஸ் கண்ணாடி - ஈய ஆக்ஸைடு
2) வெட்டக்கூடிய கண்ணாடி - சோடா லைம் - சிலிக்கா
3) கருமை நிறக்கண்ணாடி - வெள்ளி அயோடைடு
4) சாதாரண கண்ணாடி - போரான் ஆக்ஸைடு

50. கூற்று: கண்ணாடி தயாரிப்பின் போது சோடா சாம்பல் சேர்க்கப்பட்ட மணல் விரைவாக குளிர்விக்கப்படுகிறது.

காரணம் 1: விரைவாக குளிர்விக்க அணுக்கள் தனது பழைய படிக அமைப்பைப் பெற்று உறுதியாக இருக்கும்.

காரணம் 2: விரைவாக குளிர்விக்க அணுக்கள் புதிய படிக அமைப்பைப் பெறும்.

1) கூற்று, காரணம் 2 சரி, காரணம் 1 தவறு
2) கூற்று, காரணங்கள் சரி
3) கூற்று, காரணம் 1 சரி, காரணம் 2 தவறு
4) கூற்று, காரணங்கள் தவறு

51. ஐடெனல்லா சகீயன்சிஸ் 201-F6 என்ற பாக்டீரியா சிதைக்கும் PET பாட்டில்கள் எந்த ரெசின் குறியீட்டு வகையைச் சார்ந்தது?

1) 1 2) 2 3) 3 4) 4

52. PET என்பதன் விரிவாக்கம் _______.

1) பாலி டெரிப்தாலேட்
2) பாலியெஸ்டர்
3) பாலி டெரிலின்
4) பாலி எத்திலீன் டெரிப்தாலேட்

LIVEWORKSHEETS

53. எட்மண்ட் அலெக்ஸாண்டர் பார்க்ஸ் உருவாக்கிய முதல் நெகிழியின் பெயர் _______.

1) பார்க்கிசீன் 2) PET

3) பாலி லாக்டிக் அமிலம் 4) பாலியெஸ்டர்

54. PLA என்பது _______.

1) Poly Lactic Acid 2) Poly Lactic Amine

3) Programmable Logic Array 4) Poly Lactic Amide

55. பட்டு, கம்பளியை விட வலிமையானது _______.

1) பருத்தி 2) நைலான் 3) ரேயான் 4) அக்ரிலிக்

56. கம்பளி போன்ற தோற்றமுடையது _______.

1) பருத்தி 2) நைலான் 3) ரேயான் 4) அக்ரிலிக்

57. சரியான இணையைத் தேர்வு செய்க.

1) நைலான் - மரக்கூழ்

2) PVC - இறுகும் நெகிழி

3) பேக்கலைட் - இளகும் நெகிழி

4) டெஃப்லான் - ஒட்டாத சமையற்கலன்

58. கூற்று: மண்ணில் புதைக்கப்பட்ட காய்கறிக் கழிவுகள் இரு வாரங்களில் மறைய, நெகிழிப்பைகள் அப்படியே உள்ளது.

காரணம்: காய்கறிக்கழிவுகள் மட்காத தன்மையும், நெகிழிப்பைகள் மட்கும் தன்மையும் உடையவை.

1) கூற்று சரி காரணம் தவறு 2) கூற்று காரணம் இரண்டும் சரி

3) கூற்று தவறு காரணம் சரி 4) கூற்று காரணம் இரண்டும் தவறு

59. மரக்கூழ் + சோடியம் ஹைட்ராக்ஸைடு + கார்பன் டை சல்பைடு _ ?

1) ரேயான் 2) விஸ்கோஸ் 3) நைலான் 4) அக்ரிலிக்

60. பாலிகாட் : பாலியெஸ்டர் + பருத்தி :: பாலிவுல் : _______

1) பாலியெஸ்டர் + செம்பருத்தி 2) எஸ்டர் + பருத்தி

3) பாலியெஸ்டர் + கம்பளி 4) எஸ்டர் + கம்பளி

61. _______ மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் இழை ஆகும்.

1) பாலியெஸ்டர் 2) ரேயான் 3) பஞ்சு 4) நைலான்

LIVEWORKSHEETS

62. ஓர் இயற்கை இழையினை சுடரில் காட்டினால் அவ்விழை _______.

1) உருகும் 2) வெடிக்கும் 3) சுருங்கும் 4) எரியும்

63. கம்பளியைப் போன்ற பண்புகளை உடைய செயற்கை இழை _______.

1) நைலான் 2) பாலியெஸ்டர் 3) அக்ரிலிக் 4) PVC

64. பொருத்துக.

a) நைலான் - i) ஒட்டாத சமையற்கலன்

b) PVC - ii) செயற்கை இழை

c) பேக்கலைட் - iii) மரக்கூழ்

d) டெஃப்லான் - iv) வெப்பத்தால் இறுகும் நெகிழி

e) ரேயான் - v) வெப்பத்தால் இளகும் நெகிழி

1) a - ii b - v c - iv d - i e - iii 2) a - iii b - iv c - i d - v e - ii

3) a - i b - ii c - iv d - iii e - v 4) a - I b - iii c - iv d - ii e - v

65. ஒப்புமை தருக.

பருத்தி : இயற்கை : : _______ : செயற்கை

1) பாலியெஸ்டர் 2) பட்டு 3) பருத்தி 4) கம்பளி

66. ஒப்புமை தருக.

PLA கரண்டி : மட்கும் : : நெகிழிக் கரண்டி : _______.

1) மட்கும் 2) மட்காது 3) உருகும் 4) இறுகும்

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

67. மட்கிப் போகும் தன்மை உடைய பிளாஸ்டிக் பொருளின் வணிகப் பெயர் _______. (NMMS 2018)

(1) பாலிஹைட்ராக்சி பியூட்டிரேட் (2) ஆல்காலிஜன்ஸ்

(3) பாலிவினைல் குளோரைடு (4) நெகிழி

68. பொருத்துக (NMMS 2020 - 21)

(a) இயற்கை பலபடிகள் - i. செல்லுலோஸ்

(b) செயற்கை பலபடிகள் - ii. தோல்

(c) புரத பலபடிகள் - iii. மனித உடல்

(d) கார்போஹைட்ரேட் பலபடிகள் - iv. பிளாஸ்டிக்

a b c d

LIVEWORKSHEETS

(1) iii iv ii i

(2) i iii ii iv

(3) ii iii i iv

(4) iv ii i iii

69. நெகிழி உண்ணும் பாக்டீரியா _______. (NMMS - 2020 - 21)

(1) அசட்டோபாக்டர்

(2) நைட்ரோசோமோனாஸ்

(3) ஐடெனல்லா சகீயன்சிஸ்

(4) சால்மோனெல்லா

70. PVC என்பதன் விரிவாக்கம் _______.

1) Poly vinyl chloride

2) Poly vinyl carbonate

3) Poly vinyl carbon

4) Poly vinyl alcohol

LIVEWORKSHEETS